Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 18 செவ்வாய்க்கிழமை (03-09-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 273

# பிரதம மந்திரிக்கு எதிராகவும் நம்பிக்கையில்லா பிரேரணை

## எதிரணியினர் திட்டம்

கொழும்பு, செப். 3

ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவுக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணை ஒருபுறமிருக்க —

மறுபுறத்தில் பிரதமர் டி. பி. விஜேதுங்காவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டு வரவும் எதிரணியினர் நடவடிக்கை எடுத்து வருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் 24 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது இதற்கான பிரேரணையை சபையில் விவர்தத்துக்கு எடுக்கவும் [எதிரணியினர் திட்டமிட்டிருக்கின்றனர்.

சபை கூடியதும் அன்றைய தினத்துக்குரிய நிகழ்ச்சி நிரலை ரத்துச் செய்வதற்கான பிரேரணை ஒன்றை எதிரணியினர் முன்மொழிவார்கள் என்றும் —

நிகழ்ச்சி நிரலை ரத்துச் செய்து தீர்மானம் நிறை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இரகசிய வாக்கெடுப்பு நடத்த லலித் கோரிக்கை

கொழும்பு, செப். 3

ஜனாதிபதிக்கு எதிரான அரசியல் குற்றப் பிரேரணை மீது நாடாளுமன்றத்தில் இரகசிய வாக்கெடுப்பு நடத்துவதே தற்போதைய அரசியல் நெருக்கடியைத் தீர்க்க சிறந்த வழியாகும்.

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி நேற்றுச் செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.

இதற்கிடையில்—

ஜனாதிபதி மீதான அரசியல் குற்றப்பிரேரணை பற்றி மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்துத் தீர்மானிப்பதற்காக எதிர்க்கட்சி எம். பிக்களும், ஆளும் கட்சியின் 'அதிருப்தி' எம்.பிக்களும் கூட்டு நடவடிக்கைக் குழு ஒன்றை அமைத்துள்ளனர் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## பின்னணியில் இந்தியாவா?

## லலித் - காமினி மறுப்பு

ஜனாதிபதி பிரேமதாஸாவைப் பதவி நீக்கும் தமது முயற்சிக்குப் பின்னால் இந்தியாவினதும் மற்றும் மேற்கு நாடுகளினதும் அழுத்தங்கள் இருப்பதாகக் கூறப்படுவதை திரு. லலித் அத்துலத்முதலியும், திரு. காமினி திஸநாயக்காவும் மறுத்துள்ளனர்.

செய்தியாளர்களிடம் அவர்கள் இம் மறுப்பை வெளியிட்டனர் என்று இந்திய ஸ்டேட்ஸ்மென் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது. [இ-எ]

## திருமலையில் கண்ணி!

யாழ்ப்பாணம், செப். 3

நேற்றுக்காலை 8 மணியளவில் திருகோணமலை மாவட்டம் சம்பூர் கோட்டையிலிருந்து 7ஆம் கட்டைப் பகுதிக்கு ரோந்து சென்ற படையினர்மீது புலிகள் 'கிளைமோர்' தாக்குதல் நடத்தினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மிதிவெடியுடன் இணைத்து வைக்கப்பட்ட இந்த கிளைமோர் வெடித்ததில் இராணுவத்தினருக்குப் பெருஞ் சேதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடிகளில் சிக்கி அரசுப்படையைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-எ-5)

## தமிழ்நாட்டில் புலிகள் மீண்டும் வலிமை அடைவர்

### 'இந்து' பத்திரிகை தகவல்

சென்னை, செப். 3

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் நிலை சற்றுத் தளர்வடைந்துள்ளது போலக் காணப்பட்டாலும், நிச்சயம் அங்கு அவர்கள் அழிந்தொழிந்து விடவில்லை. தனது சாம்பலிலிருந்து உயிர்த்தெழும் 'பீனிக்ஸ்' பறவைபோல அவர்கள் மீண்டும் அங்கு வலிமை அடைவார்கள்.

— இவ்வாறு இந்திய பாதுகாப்பு வட்டாரங்கள் நம்புவதாக சென்னையிலிருந்து வெளியாகும் 'இந்து' பத்திரிகை தெரிவித்துள்ளது.

தற்போதுள்ள பொலீஸ் கெடுபிடி நடவடிக்கைகள் நீண்ட காலத்துக்குத் தொடர முடியாது.

கடந்த காலங்களில் பின்னடைவுகள் ஏற்பட்ட பல சந்தர்ப்பங்களில் புலிகள் மீண்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சுபா, சிவராசனின் சடலங்கள்; அடக்கம் செய்ய முடிவு

கர்நாடகத்தில் சயனைட் அருந்தி மரணமான தாகக் கூறப்படும் சுபா, மற்றும் ஒற்றைக்கண் சிவராசன் ஆகியோரது உடல்கள் சந்தேகத்துக்கு இடமின்றி அடையாளம் காணப்பட்டு விட்டதால் அவற்றை அடக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக 'இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

ராஜீவ் கொலைச் சம்பவத்தின் முக்கிய சந்தேக நபர்களான இவர்கள் இருவரினதும் சடலங்களை, பாதுகாத்து வைத்திருக்குமாறு முன்னர் இரகசியப் பொலீஸார் உத்தரவிட்டிருந்தனர். [உ-10]

## பிரேமாவுக்கு ஆதரவாக 116 எம். பிக்கள் தீர்மானம்!

### அதிருப்தியாளர் குழுவும் பங்குபற்றியதாம்

கொழும்பு, செப். 3

ஜனாதிபதி பிரேமதாஸா நேற்றுக் கூட்டிய அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில்: ஐ. தே. கட்சி எம். பிக்கள் 125 பேரில் 116 பேர் பங்குபற்றியதாக அறிவிக்கப்படுகிறது.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி மீது நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் ஜனாதிபதி பிரேமதாஸா மீதான குற்றவிசாரணைப் பிரேரணையில் கையொப்பமிட்ட ஐ. தே. கவின் அதிருப்தியாளர் குழு எம். பிக்களும் தங்களை இனங்காட்டக்கூடாது என்பதற்காக இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர் என மற்றொரு செய்தி தெரிவிக்கிறது.

ஜனாதிபதிக்கு எதிராக சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் பிரேரணையில் கையொப்பமிட்டிருக்கும் ஆளும் கட்சி எம். பிக்கள் யார். யார் என்ற விவரம் இன்னமும் வெளியாகவில்லை.

இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக - பகிரங்கமாக பிரசாரம் செய்து வரும் திரு. லலித் அத்துலத் முதலி, திரு. காமினி திஸநாயக்கா, திரு.

[4 ஆம் பக்கம் பாரக்க]

## லலித் கடைசியாகவே கையொப்பமிட்டாராம்!

கொழும்பு, செப். 3

ஜனாதிபதி பிரேமதாஸாவை பதவி நீக்கக்கோரும் பிரேரணையை கொண்டு வந்த சூத்திரதாரிகளில் ஒருவரான திரு. லலித் அத்துலத் முதலி, பிரஸ்தாப பிரேரணை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்ட பின்னரே அதில் ஒப்பமிட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை அனுரா பண்டார நாயக்க தலைமையில் சென்ற ஸ்ரீ. ல. சு. கட்சி எம். பிக்கள் குழு ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணையை சபாநாயகரிடம் ஒப்படைத்தது. அச்சமயம் அந்தப் பிரேரணையில் லலித் ஒப்பமிட்டிருக்கவில்லை.

திரு. லலித் புதன்கிழமை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ராஜீவ் கொலை விசாரணை:

## இந்திய புலனாய்வுக் குழு மீண்டும் கொழும்பு வரும்

சென்னை, செப். 3

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விசாரணை நடத்தி வரும் விசேட புலனாய்வுக் குழுவினர் மீண்டும் கொழும்புக்கு விஜயம் செய்யவிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இல[illegible] காரிகளுடன் இக் குழுவினர் மேலும் பேச்சுவார்த்தைகளை நடத்தித் தகவல்களை அப்போது பெற்றுக் கொள்வர் என்று சொல்லப்படுகிறது.

இதேவேளை ராஜீவ் காந்தியைக் கொலை செய்தவர்கள் நிச்சயமாக விடுதலைப் புலிகளே என்ற முடிவுக்கு விசேட [illegible] குழுவினர் வந்திருப்பதாக 'இந்து' செய்தி வெளியிட்டிருக்கிறது. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊரடங்கு நீக்கம்

கொழும்பு, செப். 3

செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமுல் நடத்தப்பட்டு வந்த ஊரடங்குச் சட்டம் உடனடியாக நீக்கப்பட்டு விட்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருக்கிறது. (உ-எ)

## வவுனியாவில் தாக்குதல்?

கொழும்பு, செப். 3

வவுனியாவில் நேற்று முன்தினம் இராணுவ முகாம் ஒன்றை விடுதலைப் புலிகள் தாக்கியதைத் தொடர்ந்து அப்பகுதியில் உடனடியாக ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது என்று வெரித்தாஸ் வர்னொலி அறிவித்தது. [உ-எ]

## ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், செப். 3

பலாலி, காரைநகர் பகுதிகளில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்று குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல்த்தாக்குதல்களை மேற்கொண்டனர்.

பலாலியிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் கட்டுவன், குப்பிளான், வீமன்காமம், தெல்லிப்பளை ஆகிய இடங்களில் விழுந்து வெடித்ததாக தெரியவந்தது. (உ-5)

## அம்பாறையிலும் வெடி குண்டு!

லண்டன், செப். 3

அம்பாறை மாவட்டத்தில் அறுவடை செய்து குவிக்கப்பட்டிருந்த நெற்குவியல் ஒன்றினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் ஆறு பேர் படுகாயமடைந்தனர் என பி. பி. ஸி நேற்றுத் தெரிவித்தது. (உ-5)

★ காத்தான்குடியில்

## கார்க்குண்டு வெடித்ததும் முகாம் மீது தாக்குதல்!

கொழும்பு, செப். 3

காத்தான்குடியில் கார்க்குண்டு வெடித்த இடத்திற்கு அருகில் உள்ள இராணுவ முகாம் மீது போராளிகள் தாக்குதல் நடத்தியதாகக் கொழும்புத் தகவல்களை ஆதாரம் காட்டி இந்திய வானொலி அறிவித்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணியளவில் அந்தக் கார்க்குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற அதே நேரத்தில், முகாம் மீதான தாக்குதலும் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 8 முஸ்லிம்கள் உயிரிழந்தனர் என்றும், இருபதுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர் என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. [உ-எ-10]

## ஐ. நா. மனித உரிமைக் குழு தலைவராக கிளாட்ஸ்ரோன்?

லண்டன், செப். 3

ஐ. நா. மனித உரிமைகள் உப குழுவின் தலைவராக வருவதற்கான ஆதரவைத் திரட்டுவதில் திரு. டேவிட் கிளாட்ஸ்ரோன் முயற்சித்து வருகிறார் என்று தெரியவருகிறது.

பிரிட்டிஷ் தூதராக திரு. டேவிட் கிளாட்ஸ்ரோன் இலங்கையில் பணிபுரிந்து வந்தார்.

அண்மையில் இலங்கையின் உள்ளூராட்சித் தேர்தலின் போது ராஜதந்திர நெறிமுறைகளுக்கு முரணாகத் தலையிட்டார் என்ற காரணத்தைக் காட்டி திரு. கிளாட்ஸ்ரோன் இலங்கை அரசால் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டார் என்பது தெரிந்ததே.

இலங்கையில் மனித உரிமை மீறல்களில் அரசு ஈடுபட்டிருப்பதை திரு. கிளாட்ஸ்ரோன் சுட்டிக்காட்டினார் என்றும், அதற்காகவே அவரை அரசு வெளியேற்றியது என்றும் பிரிட்டிஷ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

வேப்பம் விதை, இலுப்பம் விதை தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். [சி-0396]

### இடமாற்றம்

வேலணையிலும், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலும் இயங்கி வந்த நடன முருகன் வைத்திய நிலையம் தற்காலிகமாக ஆஸ்பத்திரி வீதி [76] 222 ஆம் இலக்கக் கட்டடத்தில [சத்திரச் சந்திக்கருகாமையில்] இடமாற்றப்பட்டுள்ளது. வைத்தியர்:- கந்தையா நவரத்தினம். (17684)

### வைத்திய சேவை

Dr. அல்போன்ஸ் அத்தனாசியார் பண்டத்தரிப்பில் 18 - 8 - 91 தொடக்கம் திரும்பவும் தமது வைத்திய சேவையை ஆரம்பித்திருக்கிறார். (17981)

### பாடப் புத்தகம்

O/L, A/L மாணவர்கள் இலகுவில் ஆங்கிலம் கற்க, கற்பிக்க கைநூலாக 'ஈசி இங்கிலிஷ்' (Easy English) வெளிவந்துள்ளது. 1 ஆம், 5ஆம் பகுதிகள் தமிழ்மொழி பெயர்ப்புடன் புத்தக நிலையங்களில் விற்பனைக்குண்டு. (17999)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



தமிழீழ மண்ணில்:
22 - 03 - 1973

தமிழீழ மீட்பில்:
21 - 07 - 1991

கட்டைக்காடு நேரடி மோதலில் வீரமரணமடைந்த

### வீரவேங்கை நிசாந்தன்
### [இராஜதுரை நந்தகுமார்]

விண்ணில் விளங்கா விரைவில் நீ சென்றதேனோ.

உமது பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

சிவன் வீதி,
உரும்பராய் கிழக்கு. (18002)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு: 19 — 05 — 1929

உதிர்வு: 04 — 08 — 1991

### Dr. C. K. துரைரத்தினம்

(ஓய்வுபெற்ற பிரதி மருத்துவ அத்தியட்சகர், மருத்துவ விநியோகப் பகுதி சுகாதார அமைச்சு- விரமாணிக்க தேவன்துறை)

எமது இதயக் கோயிலை ஆராதனை செய்ய
மலர்ந்த மலரே!
அந்த மலர் உதிர்வு கண்டு கலங்கிய விழிகளோடு
காலமெல்லாம் பூஜை செய்யக் காத்திருக்கிறோம்.

எமது சோகத் துயரத்தில் சகல விதத்திலும் பங்கு கொண்ட அனைவருக்கும் எங்கள் இனிய நன்றிகள்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் முகத்துவாரத்தில் 03 - 09 - 1991 இன்று காலை 7-00 மணிக்கு நடைபெறும்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

மனைவி, பிள்ளைகள், சகோதரர்.

215, 3/8, பாக் வீதி,
கொழும்பு - 5. (18004)

## 60 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

### பொன்னம்பலம் இராசையா

[இளைப்பாறிய ஆசிரியர், செயலாளர் அரசடி விநாயகர், ஆலய தர்மகர்த்தா சபை]

தோற்றம்: 30 - 8 - 1916

மறைவு: 07 - 07 - 1991

கட்டுடை அரசடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்கச் செயலாளராகவும் பின் தர்மகர்த்தா சபையின் செயலாளராகவும் நீண்ட காலம் இருந்து தனது இறுதி மூச்சு உள்ளவரை ஆலய வளர்ச்சிக்காக நல்ல பணிகள் புரிந்து 7 - 7 - 1991 இல் அரசடி விநாயகர் அடி சேர்ந்த உங்களது ஆத்ம சாந்திக்காக அரசடி விநாயகர் அடியார்கள் அனைவரும் பிரார்த்திக்கின்றோம்.

அரசடி விநாயகர் ஆலய,
தர்மகர்த்தா சபை.

கட்டுடை,
மானிப்பாய். [சி-0460]

## 1 ஆம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி

மண்ணில்: 24 — 07 — 1928



விண்ணில்: 03 — 09 — 1990

### அமரர் E. K. குமரையா

(யாழ். செயலக கட்டட மேற்பார்வையாளர்)

பாசத்தின் ஒளிவிளக்காய் இருந்த எம் அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றதப்பா! உங்கள் நினைவலைகள் எம் நெஞ்சங்களை விட்டு அகலாது. உங்கள் நினைவோடு வாழும் உங்கள் அன்புச் செல்வங்கள்!

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

99/6 சந்தானமாதா கோவில் ஒழுங்கை,
கச்சேரி கிழக்கு,
யாழ்ப்பாணம். (17996)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு:
25 05 1973



உதிர்வு:
21—07—1991

செல்வி

### மேகலா [கோமதி] இரத்தினராசா

(நளினி)

அடிமை வாழ்வை உதறித் தள்ளி மண்ணைக் காக்கப் புறப்பட்டாய், வீரப்போர் புரிந்து வீர மரணம் அடைந்தாய். நின் எண்ணம் பலித்திட உழைப்போம் என்று உறுதி கூறுகின்றோம்.

உன்னுடைய ஆத்ம சாந்திக்கும், உன்னுடன் வீர மரணம் எய்திய ஏனைய மாவீரர்களின் ஆத்ம சாந்திக்கும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்:
பெற்றோர், உடன் பிறந்தோர்,
உறவினர்கள், நண்பர்கள்.

43 B, ஜெயந்தி நகர்,
கிளிநொச்சி. [17692]

## காணவில்லை

மகேந்திரன் எனப்படும் சுமார் 13 வயது மதிக்கத்தக்க, மெலிந்த தோற்றமுடைய பையனை 30 – 08 1991 இரவு முதல் காணவில்லை. வெற்றிலை போடும் பழக்கம் உடையவர். கடைசியாக காணப்பட்டபோது நீலநிற அரை காற்சட்டையுடன் காணப்பட்டார். அவரைப் பற்றிய தகவல்களை ''சதாபொன்ஸ்' மாவிசந்தி அல்வாய் என்ற முகவரிக்கு தெரியப்படுத்தவும். [சி/0461]

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



வீரஜனனம்: 09 — 10 — 1972

வீரமரணம்: 20 — 07 — 1991

### கப்டன் ஈழவன்
### (குமாரசுவாமி றமேஸ்குமார்)

20 - 07 - 91இல் ஆனையிறவில் ஒரு போரணிக்கு தலைமை தாங்கிச் சென்று வீர மரணமடைந்த எமது மகன் றமேஸ்குமார் (கப்டன் ஈழவன்) அவர்களின் 45 ஆம் நாள் வீட்டுக் கிருத்தியத்திலும், ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

19/1, ஐயனார் கோவிலடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். [18012]

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில்: 05 — 07 — 1976



தாயக மண்ணில்: 21 — 07 — 1991

வீரவேங்கை

### சாம்பமூர்த்தி குமரேசன்
### [நேரு]

ஈழ விடுதலையில் வீர் எனச் சென்றோர் சிறுபாலகன்
ஈட்டிய சாதனையோ தியாக ஒளியாய் சுடர்விடுகிறது
பெற்றார், உடன் பிறந்தோர், உற்றார், உறவினர்
பெருந்துயர் உற்றிருக்கும் தோழர்கள் எல்லோர்க்கும்
ஆறிலும் சாவு, நூறிலும் சாவு என்ற
அறிவு மிகு தியாக ஒளியாய் விளங்கி விட்டாய்
உனதுயிரோ மடியவில்லை இன்றலர்ந்த மலர் போல்
உன்கதையை மலரும் தமிழீழம் கதை பகருமன்றோ!
பாலகன் நெஞ்சுரத்தின் வலிமையினை –
நினைந்தெண்ணி
பாரினிலே தமிழ் மக்கள் தலைதாழ்ந்தி வணங்குகிறோம்.

[ஆனையிறவுப் போரில் வீரமரணமடைந்த அனைத்து மாவீரர்களையும் நினைவு கூர்ந்து அஞ்சலிப்போம்]

உமது ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்து நிற்கும்:
அன்பு அப்பா, அம்மா,
சகோதரர்கள் மற்றும்
உற்றார், உறவினர்கள்.

ஐயன் வீதி (சிவன் கோவிலடி),
புத்தூர் மேற்கு, புத்தூர். [17679]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### புதிய போர்!

வடக்கு - கிழக்கு போர் சற்று ஓய்ந்துள்ளது. காரணம் எல்லோருக்கும் தெரிந்தது தான். தெற்கில் தொடங்கி இருக்கும் அரசமைப்பியல் போரின் வேகத்தில், தமிழ்ப் பகுதிகளில் இராணுவப் போரின் வீச்சுத் தணிந்து போயிற்று.

தெற்கில் நிகழும் போர் அரசமைப்புக்கு உட்பட்டது. அது சட்டரீதியானது. அதனால் அரசமைப்பியல் போர் என்று குறிக்கப்படுகிறது. மக்களின் விருப்பம் நெறிமுறையாக, சட்டரீதியாக மாற்றப்படும் போதே அரசமைப்புக்குரிய வலு, சக்தி பிறக்கிறது.

எனினும் அரசமைப்பு நடைமுறைப்படுத்தப்படும் விதத்திலும், அதனை நடைமுறையாக்குபவர்களிலுமே அதன் தூய்மையும்,சிறப்பும், மகிமையும் தங்கியுள்ளன. அரசமைப்பைப் பாதுகாப்பது என்றால் மக்கள் நலன்களையும். அவர்களின் விருப்பங்களையும் முன் வைத்து அரசியல் வாதிகள் பணிபுரிய வேண்டும்.

ஆனால் இலங்கை போன்ற நாடுகளில், அரசியல் வாதிகள் அரசமைப்பு, சட்டம், ஆட்சி வரன்முறை ஆகிய எல்லாவற்றையும் தங்கள் நலனுக்காக, அதற்கு உதவும் விதத்திலேயே கையாளுகிறார்கள்! அரசமைப்பு வழங்கும் அதிகாரத்தையும், பாதுகாப்பையும் தமது சொந்த மற்றும் கட்சி நலனை முன்னிறுத்தி அதன் பொருட்டுப் பயன்படுத்துகிறார்கள்!!

அதனாலேயே இப்போது எழுந்துள்ளது போன்ற அரசமைப்பியல் போர்கள் நிகழ்வதுண்டு. ஆனால் இலங்கையில் இவ்வாறு ஒரு போர் நடப்பது இதுவே முதற் தடவை. ஆகையால் இதன் விளைவு சட்டத்தை மீறிய அத்துமீறல், அதிகாரக் கொடுமை, எதேச்சதிகாரம் ஆகிய அபாயங்களுக்கு இட்டுச்செல்லும் என்றே தோன்றுகிறது.

ஏனெனில்—

அரசமைப்புச் சட்டத்தை தனது பாட்டில் செயற்படவிடப் போவதாகக் கூறிக் கொண்டே, ஜனாதிபதி பிரேமதாசா தமக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பிரேரணையை தோல்வியுறச் செய்வதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறார்; எதிர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

ஆனால் லலித் - காமினி- அனுரா கோஷ்டியும் விடுவதாக இல்லை. அவர்களும் தங்களுக்குத் தெரிந்த வழிகளில் எல்லாம்பிரேமதாசாவை வீழ்த்த முயன்று வருகிறார்கள்.

ஜே. ஆர் .நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதியை உருவாக்கிய போது, அதற்கான அரசமைப்பைக் கொண்டு வந்த போது ஆதரித்தவர்கள், இப்போது — 13 வருடங்களின் பின்னர்தான்— அதன் தீமைகளை உணர்வதாகக் கூறுகிறார்கள். நாடாளுமன்றம் நலிவுற்றுத் தனிநபர் அதிகாரம் மேலாண்மை பெற்றுவிட்டதாகச் சொல்கிறார்கள்.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் சுமார் 33 ஆண்டுகள் ஆட்சி பீடத்தில் இருந்த ஐ. தே. கட்சிக்குள் வெடித்த பெரும் எரிமலை இதுவாகும்.

இந்தப் புதிய போர் அரசியலமைப்புப் போர் என்று மினுக்கிக் கூறப்பட்டாலும் சட்டத்தை மீறிய அதிகார துஷ்பிரயோகத்துக்கும், அதன் மூலம், வன்செயல்களுக்கும், மோதல்களுக்கும் வழி செய்யும் என்றே தென்படுகிறது.

வடக்கு-கிழக்கில் உரிமைப் போரும், தெற்கில் அதிகார- ஆட்சிப் - போரும் நடக்கின்றன!

## திலீபன் நினைவு தட,கள விளையாட்டு வட்ட அவை மட்டத்தில்

யாழ்ப்பாணம், செப். 3

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் திலீபன் நினைவு தட, கள விளையாட்டுப் போட்டிகள் வட்டவை மட்டத்தில் எதிர் வரும் 6 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளன.

போட்டிகள் நடைபெறும் தினங்களும், பிரிவுகளும். இடங்களும் வருமாறு:-

**6, 7 ஆம் திகதிகளில்**

கோப்பாய் — நீர்வேலி அத்தியார் இந்து, சண்டிலிப்பாய் — பண்டத்தரிப்பு இந்து.

**7, 8 ஆம் திகதிகளில்**

சாவகச்சேரி — மட்டுவில் ம. வி, சங்கானை — அராலி மாவத்தை விளையாட்டரங்கு.

**9, 10 ஆம் திகதிகளில்**

யாழ்ப்பாணம் — யாழ். மத்திய கல்லூரி, கரவெட்டி — நெல்லியடி ம. ம. வி.

**10, 11 ஆம் திகதிகளில்**

தெல்லிப்பளை — மகாஜனாக் கல்லூரி.

**11, 12 ஆம் திகதிகளில்**

பருத்தித்துறை - ஹாட்லி கல்லூரி, நல்லூர் — கனகரத்தினம் ம. ம. வி, பளை— இத்தாவில் விளையாட்டரங்கு.

**12, 13 ஆம் திகதிகளில்**

உடுவில் — ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, மருதங்கேணி —செம்பியன்பற்று ம. வி.

நிகழ்ச்சிகளில் பங்குபற்ற விண்ணப்பித்தோர் தத்தமது வட்ட அவை விளையாட்டுப் பொறுப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு இலக்கங்களைப் பெறுமாறு கேட்கப் பட்டுள்ளது. (உ-த)

## உற்சவகால நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செப். 3

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடைபெறும் இசை, மற்றும் சமய அரங்குகளில் இன்று செவ்வாய்க் கிழமை மாலை இடம் பெறவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:-

★ நாவலர் மணிமண்டபத்தில் — சங்கீத வித்துவான் தனலஷ்மி சண்நாதலிங்கத்தின் இசைக்கச்சேரி.

★ கம்பன் கோட்டத்தில்— சங்கீத பூஷணம் எஸ். குமாரசுவாமியின் இசைக்கச்சேரி.

★ ஆதீன குருமூர்த்தி ஆலயத்தில்—திரு. ந. சிவசண்முகமூர்த்தி நிகழ்த்தும் 'சுந்தரனுபூதி' கதாப்பிரசங்கம்.

★ மேற்குவீதி பிள்ளையார் கோவிலில்—கானகதா வாரிதி வ.நித்தியானந்தசர்மா நிகழ்த்தும் கம்பராமாயணம் விரிவுரையில் 'விபூஷணா சரணாகதி'.

(அ-126-30-5)

## இளஞ்செழியன் நினைவு தினம்

யாழ்ப்பாணம், செப். 3

லெப்டினன்ட் இளஞ்செழியனின் உருவப்படம் அவரது 45 ஆவது நினைவு நாளான இன்று, செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5 மணிக்கு மயிலியதனை தொண்டமானாறு பாலச்சந்திரன் வீதியில், அவரது தாயார் திருமதி தங்கராணி வாஞ்சிநாதனால் திரை நீக்கம் செய்யப்படும்.

போராளி இளஞ்செழியன் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கவிஞர் வாஞ்சிநாதனின் ஒரே புதல்வராவர்.

தியாகி சிவகுமாரனின் தாயார் திருமதி அன்னலட்சுமி பொன்னுத்துரை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியை லெப். நித்திலாவின் தாயாரும், கப்டன் மில்லரின் தாயாரும் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பர்.

மேஜர் ஜேம்சின் தந்தை இரங்கலுரை நிகழ்த்துவார். (உ-த)

## கோப்பாயில் "உயிர்த்த மனிதரின் கூத்து"

யாழ்ப்பாணம், செப். 3

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழக ஆதரவில் நாடக அரங்கக்கல்லூரி வழங்கும் 'உயிர்த்த மனிதரின் கூத்து' நாடகம் நாளை புதன் கிழமை பிற்பகல் 4 மணிக்கு கிறிஸ்தவக் கல்லூரியில் மேடையேறவுள்ளது. (இ-3)

## செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழுவுக்கு பிரிட்டன் உதவி

இலங்கையில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மேற்கொண்டு வரும் பணிகளுக்காக பிரிட்டிஷ் அரசு மேலும் 68 லட்சத்து 37 ஆயிரம் ரூபா நிதியை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் வழங்கி உள்ளது.

கடந்த ஆண்டில் ஒரு கோடி 70 லட்சம் ரூபாவை செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழுவுக்கு பிரிட்டன் வழங்கி இருந்தது. [இ-எ]

## உடற்கல்வி கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப். 3

விசேட பயிற்சி பெறாத உடற்கல்வி ஆசிரியர்களுக்கு என தொடர்ச்சியாக ஐந்து நாள் கருத்தரங்கு ஒன்று யாழ். கல்வித் திணைக்கள உடற்கல்விப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

எதிர்வரும் 9ஆம் திகதி முதல்13ஆம்திகதிவரை யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும் இக்கருத்தரங்கில், விசேட பயிற்சி பெறாத சகல உடற்கல்வி ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளும்படி உடற்கல்விக்குப் பொறுப்பான கல்வி அதிகாரி திரு. த. அருணகிரிநாதன் கேட்டுள்ளார்.

இக்கருத்தரங்கின் இறுதி நாள் நிகழ்ச்சியில் வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் கலந்து கொள்வார். [உ]

நல்லூர் உற்சவகாலச் சிறப்பகசம்

### ஆறுமுகம் ஆயிரமாய் மாறும்!

எதிரிபடை அதிர்ந்தோட ஏவுமுகமொன்று;
எத்தர்களைக் களம்புகுந்து அழிக்குமுகமொன்று;
அதிரடியில் கவசங்கள் அழிக்குமுக மொன்று;
ஆயுதங்கள் கைப்பற்றி ஆர்க்குமுக மொன்று;
மிதிவெடியில் பகைவர்களை வீழ்த்துமுக மொன்று
மிடுக்கினொடு தமிழீழம் மீட்குமுக மொன்று;
கதிர்வேலன் நல்லூரான் களத்தினிலே நின்று:
காத்திடவே ஆறுமுகம் ஆயிரமாய் மாறும்.

முருகனடியான்.

## யாழ். பல்கலைக்கழக பரீட்சை நடக்கும் திகதிகள்

கொழும்பு, செப். 3

யாழ். பல்கலைக்கழக வருடாந்த பரீட்சைகள் நடைபெறும் திகதிகள் குறித்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பரீட்சைநடைபெறும் திகதிகளும், துறைகளின் விவரமும் வருமாறு:-

★ கலை, வர்த்தகம், வியாபார நிர்வாகம்- 19-09-91 முதல் 28-09-91 வரை.

★ பொது, கலைப்பிரிவில் விசேட பட்டம், வர்த்தகம், வியாபார நிர்வாகம் பகுதி-1, தத்துவப் பட்டப் பின்படிப்பு 30-09-91 முதல் 11-10-91 வரை.

★ பொது, கலைப் பிரிவில் விசேட பட்டம், வர்த்தகம், வியாபார நிர்வாகம் பகுதி-2, தத்துவபின்படிப்பு 12-10-91 முதல் 25-10-91 வரை.

★ கலைத்துறையில் விசேட பட்டம், வர்த்தகம், வியாபார நிர்வாகம் பகுதி-3, தத்துவ பின் படிப்பு 26-10-91 முதல் 31-10-91 வரை.

★ விஞ்ஞான பீடம், விஞ்ஞான பீட முதற்பரீட்சை- 14-10-91. (இ-3)

## சிப்பாய்களுக்கு உதவுவதில் சிங்கள மக்கள் அசமந்தம்

### இராணுவ அதிகாரி சீற்றம்

கொழும்பு, செப். 3

ஆனையிறவில் யுத்தத்தில் ஈடுபட்டிருந்த சிப்பாய்களுக்கு சிங்கள மக்கள் திருப்தி தரும் வகையில் உதவவில்லை என்று ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரி ஒருவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக கேர்ணல் மகிந்த திஸநாயக்கா தெரிவித்திருப்பதாவது:-

யுத்தம் நடந்த சமயம், இராணுவ நலன்புரிச் சங்கம் சிப்பாய்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருள்களை வழங்கி உதவிடும்படி வெகுசனதொடர்பு சாதனங்கள் மூலம் கோரிக்கை விடுத்திருந்தது.

இது குறித்து சிங்கள மக்கள் பெரிது படுத்தவில்லை. அவர்களிடம் இருந்து எமக்கு போதியளவு ஆதரவு கிடைக்கவில்லை. இது வேதனையைத் தருகிறது.

புலிகளுடன் போரிடும் சிப்பாய்கள் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். அவர்களது நிலை குறித்து பொதுமக்கள் புரிந்து கொள்ளவில்லை. இது கவலை தரும் விடயமாகும்.

ஆனையிறவுப் போரில் நாம் வென்றிருக்காவிடில், இந்த நாட்டுக்கு என்ன நடந்திருக்கும்?

இதனை உணர்ந்து சிங்கள மக்கள் சிப்பாய்களுக்கு உற்சாகம் அளிக்கக் கூடிய விதத்தில் நடந்து கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார். (ஒ-த)

### போல்டிக் குடியரசுகளின்

## சுதந்திரப் பிரகடனத்துக்கு 'கோர்பி' அங்கீகாரம்

மாஸ்கோ, செப். 3

போல்ரிக் குடியரசுகளின் சுதந்திரப்பிரகடனத்தை ஏற்பதாக சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் சோர்பச்சேவ் நேற்றுத் தெரிவித்தார்.

மக்களுக்கு சுயநிர்ணய உரிமை இருப்பதாகக் கூறிய திரு. கோர்பச்சேவ், சுதந்திரப்பிரகடனஞ் செய்துள்ள மாநிலங்களின் எதிர்காலம் பற்றி சோவியத் நாடாளுமன்றம் தான் இறுதி முடிவு எடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

இதேவேளை— சோவியத் ஜனாதிபதி தலைமையில் மாநிலக் குடியரசுகளின் தலைவர்கள் அங்கம் வகிக்கும் புதிய சமஷ்டி அமைப்பை உருவாக்குவதான யோசனையை திரு. கோர்பச்சேவ் வெளியிட்டிருக்கிறார்.

இந்த யோசனை நேற்று ஆரம்பமான சோவியத் நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

## சிவராசனுக்கு பெங்களூரில் இரங்கல் கூட்டம்?

கர்நாடக மாநில தலைநகர் பெங்களூரில் அண்மையில் ஒற்றைக் கண் சிவராசன் நினைவாக இரங்கல் கூட்டம் ஒன்றை ஈழப் போராளிகளின் ஆதரவாளர்கள் எனச் சந்தேகிக்கப்படுவோர் நடத்தினர் என்று சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த விடயம் தொடர்பாக இந்திய நாடாளுமன்றத்திலும் கேள்வி எழுப்பப் பட்டது.

இரங்கல் கூட்டத்தில், சிவராசன் தற்கொலை செய்யக் காரணமானவர்களை பழிக்குப் பழி வாங்குவதாக உறுதிமொழி எடுக்கப்பட்டதாக கடம்பூர் எம். பி. ஜனார்த்தனம நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். (ஒ-த)

## பகிரங்கத் தீர்ப்பு

தென்மராட்சி, செப். 3

சாவகச்சேரி தனங்கிளப்பு வீதி நாச்சிமார் கோவில் காட்டில் கயிற்றில் தொங்கிய நிலையில் கடந்த வெள்ளிக் கிழமை கண்டு பிடிக்கப்பட்ட சடலம் அடையாளம் காணப் பட்டது.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சின்னத்தம்பி ஞானசேகரம் என்பவரின் சடலம் அதுவென்று உறவினர்கள் அடையாளம் காட்டினர்.

சடலம் விடுதலைப் புலிகளால் கண்டுபிடிக்கப்பட்டு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்தது. இவரது சடலதுக்கு அருகில் புதிய சைக்கிள் ஒன்றும் பையும் காணப்பட்டன.

மரணவிசாரணை நடத்திய திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. ந. தர்மேந்திரா பகிரங்கத் தீர்ப்பு வழங்கினார். (அ-117)

## வீனஸில் நில நடுக்கம்

கலிபோர்னியா, செப். 3

வீனஸ் கிரகத்தில் நில நடுக்கம் ஏற்பட்டதை மகலன் விண்கலம் கண்டு பிடித்துள்ளது.

பூமியைப் போன்று கிரகங்களிலும் புவியியல் மாற்றம் உண்டாகிறது என்பதற்கான முதல் ஆதாரமாக இந்த கண்டுபிடிப்பு அமைந்திருப்பதாக அமெரிக்க விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

வீனஸ் கிரகத்தில் ஏற்பட்ட நடுக்கத்தினால் அங்கு மண்சரிவும் இடம் பெற்றதாம். [இ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொடேர்ண் எடியுகேசன் சென்ரர்

நெல்லியடி, கரவெட்டி.

## பயிற்சி வகுப்புகள்

1. கிராம அலுவலர் பதவி
2. எழுதுனர் பதவி

மேற்படி பதவிகளுக்குரிய போட்டிப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புகள் 07 - 09 - 1991 சனிக்கிழமை பி. ப. 3 - 00 மணிக்கு ஆரம்பமாகும். மேலதிக விவரங்களுக்கு நேரில் வரவும்.

[18006] – நிர்வாகி.


### கல்வித் திணைக்களம்,
கிளிநொச்சி

## கேள்வி அறிவித்தல்

**கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்குத் தேவையான மரத்தளபாடங்கள் வழங்குதல்.**

கிளிநொச்சிக் கல்வித் திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள பாடசாலைகளுக்குத் தேவையான கீழே காட்டப்பட்டுள்ள மரத் தளபாடங்களை வழங்குவதற்கும், விநியோகிப்பதற்குமாக முத்திரையிடப்பட்ட கேள்விகள், மரத்தளபாட உற்பத்தியாளர்கள் / விநியோகஸ்தர்களிடமிருந்து 20 - 09 - 1991 ஆம் திகதி காலை 10-00 மணி வரை கிளிநொச்சி கல்வித் திணைக்கள கேள்விச் சபைத் தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

தயாரிப்பாளர்கள்/விநியோகஸ்தர்கள் ஒவ்வோர் தளபாடங்களுக்குமாக தனித்தனியே அவற்றின் கூறு விலைகளையும், ஒவ்வோர் கொத்தணிப் பாடசாலைகளுக்குக் கொண்டு சென்று விநியோகிப்பதற்கான ஏற்றுக்கூலி உட்பட அவற்றிற்கான கூறுவிலைகளையும் வெவ்வேறாகத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

**கிளிநொச்சி மாவட்ட கொத்தணிப் பாடசாலைகள்:**

1. கிளிநொச்சிக் கொத்தணி,
2. பரந்தன் கொத்தணி,
3. பூநகரி கொத்தணி,
4. வட்டக்கச்சி கொத்தணி,
5. முரசுமோட்டை கொத்தணி.
6. பளை கொத்தணி,
7. முழங்காவில் கொத்தணி,
8. அக்கராயன் கொத்தணி.
9. உருத்திரபுரம் கொத்தணி.

இத்திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் (இணைப் பிரதிகளில்) இத்திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டிக்குள் உரிய நேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடதுகை மேல் மூலையில் '' பாடசாலைத் தளபாடங்களுக்கான கேள்விகள் '' என எழுதுதல் அவசியம். கேள்வி முடிவு நேரத்தின் பின்னர் கேள்விகள் திறக்கப்படும். அச்சமயம் கேள்வியாளர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

கேள்விப் படிவங்கள், நிபந்தனைகள், மாதிரிப் படங்கள், விவரக்கூற்றுக்கள் ஆகியவைகளை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 50/-உம். மீளளிக்கத்தக்க வைப்புப் பணமாக ரூபா 200/-ம் கிளிநொச்சிப் பிரதேசக் கல்விப் பணிப்பாளரின் பெயரில் கிளிநொச்சி இலங்கை வங்கியில் இருந்து பெறப்பட்ட கொடுப்பனவுக் கட்டளையாக 16 - 09 - 1991 ஆம் திகதி காலை 10-00 மணிக்கு முன்னர் இவ்வலுவலகத்தில் செலுத்தி உரிய பற்றுச் சீட்டினை ( பொது 172 ) சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ள முடியும்.

**தேவைப்படும் தளபாடங்கள் பற்றிய விவரம்:**

[அ] ஆசிரியர் மேசை,
[ஆ] ஆசிரியர் கதிரை,
[இ] அதிபர் மேசை,
[ஈ] கரும்பலகை [தாங்கியுடன்],
[உ] ராக்கை,
[ஊ] கண்ணாடி அலுமாரி,
[எ] கட்டில்,
[ஏ] நூலக அறை மேசை,
[ஐ] ஸ்ரூல்.

க. கந்தசாமி,
பிரதேசக் கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி.

கல்வித் திணைக்களம்.
கிளிநொச்சி.
01 - 09 - 1991 [சி-0456]

# ஜே. ஆரின் ஆட்சியில் இருந்த உரிமை இப்போது இல்லை

## காமினி திஸாநாயக்கா கூறுகிறார்

கொழும்பு, செப். 3

தனிமனித ஆட்சியில் இருந்து ஐ.தே.க.வை சரியான வழிக்கு மீட்டெடுக்க நாராளுமன்றத்துக்கு உள்ளேயும், வெளியேயும் போராட வேண்டியுள்ளது. ஜே. ஆரின் ஆட்சியில் இருந்த உரிமைகள் இப்போது பறிக்கப்பட்டு விட்டன.

இப்படிக் கூறியுள்ளார் முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா.

நாடாளுமன்றக் கட்டடத்தில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும் கூறியதாவது:

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமை பறிக்கப்படும் தீர்மானத்துக்கு எதிராக ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சியில இரண்டரை மணி நேரம் மந்திரி சபையில் விவாதித்தேன். அதற்காக ஜே. ஆர். என்னை பழிவாங்கவில்லை.

ஆனால் தற்போதைய ஆட்சியில் நாடாளுமன்றக் குழுவிலோ அல்லது மந்திரி சபையிலோ சுதந்திரமாக வாதட முடியாது. கருத்துக்களை வெளியிட வாய்ப்பு இல்லை, விமர்சனத்துக்கு இடமில்லை,

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை இன்றைய ஜனாதிபதி அன்றைய ஆட்சியில் ஆதரிக்கவில்லை. அதற்குஎதிராக கருத்து வெளியிட்டார். அப்போது இப்படிச் செய்ய உரிமை இருந்தது. ஆனால் இன்று பிரேமதாஸா ஆட்சியில் அப்படிச் செய்ய சுதந்திரம் இல்லை.

இப்படி காமினிதிஸநாயக்க கூறினார். [இ-3]

## லலித்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நடந்த அமைச்சரவைக் கூட்டத்திலும் கலந்து கொண்டார்.

அந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி மீது நம்பிக்கைத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அமைச்சர்கள், துணை அமைச்சர்கள், திட்ட அமைச்சர்கள் கலந்து கொண்ட மாநாட்டிலும் திரு. அத்துலத் முதலி கலந்து கொண்டிருந்தார். அதோடு மட்டுமில்லாமல் வியாழக்கிழமை பிற்பகல் ஜனாதிபதியைச் சந்தித்து நீண்ட நேரம் பேசினார்.

அப்போது பௌத்த சாசன இணை அமைச்சர் திரு, லால் கமகேயும் உடனிருந்தார்.

வெள்ளிக்கிழமை காலை அமைச்சர் பதவியிலிருந்து விலகும் தனது இராஜினாமாக் கடிதத்தைச் சமர்ப்பித்த பின்னரே திரு. அத்துலத் முதலி சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டிருந்த பிரேரணையில் ஒப்பமிட்டார்.

பிரஸ்தாபப் பிரேரணையில் அதற்கு முன்னரே ஒப்பமிட்டிருந்த அரச தரப்பு எம். பிக்கள் பலர், அத்துலத்முதலி கையெழுத்திடாமல் இழுத்தடித்தது குறித்து அதிருப்தி தெரிவித்ததுடன், லலித் தங்களை மாட்டிவிட்டு, தான் தப்பிக்கொண்டு விட்டாரோ என்றும் அச்சப்பட்டனராம்!

## தமிழ்நாட்டில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டும் வலுவுள்ள சக்தியாக மாறி வந்திருக்கின்றனர்.

தமது தளத்தை விரிவுபடுத்தவும், பலத்தைப் பெருக்கவும் தேவையான ஆற்றல் புலிகளிடம் இருக்கிறது.

தமிழகத்தில் புலிகளுக்கு அவர்களின் ஆதரவாளர்களின் உதவி தொடர்ந்து கிடைக்கிறது; கிடைத்து வரும்.

நீண்ட காலமாக பெரும் எண்ணிக்கையில் ஆயுதங்கள் தமிழ்நாட்டிற்குள் கடத்தி வரப்பட்டு, பின் அவை யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு வந்துள்ளன.

இதற்கென கோலாலம்பூரில் தலைமையகத்தைக் கொண்டுள்ள — லத்தின் அமெரிக்க நாடொன்றில் பதிவு செய்யப்பட்ட — கப்பலொன்று பயன்படுத்தப்பட்டது.

— இவ்வாறு அந்தச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது. (உ-10)

## பிரதம...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வேற்றப்பட்டதும், புதிதாகத் தயாரிக்கப்படும் நிகழ்ச்சி நிரலில் பிரதமருக்கு எதிரான பிரேரணையைச் சேர்த்துக் கொள்ளும்படி அவர்கள் கோருவார்கள் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சிகள் மற்றும் ஆளும் ஐ. தே. கட்சியில் உள்ள அதிருப்தியாளர்களின் எண்ணிக்கை அரைவாசிக்கு அதிகமாக இருந்தால்—

பிரதமர் விஜேதுங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேறும் என்று அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

அவ்வாறு நம்பிக்கையில்லா பிரேரணை நிறைவேற்றப்பட்டால்—

அரசமைப்பின் 43 (3) ஆம் பிரிவின்படி நாடாளுமன்றத்தின் நம்பிக்கையைப் பெறுவதற்கு வாய்ப்புள்ள ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை பிரதமராக, நியமிக்க வேண்டிய நிலை ஜனாதிபதிக்கு ஏற்படும்.

அத்தகைய சந்தர்ப்பத்தில் எதிரணியில் அல்லது ஐ. தே. காவின் அதிருப்தியாளர் குழுவிலிருந்து ஒருவரை பிரதமராக நியமிக்க வேண்டிய நிலைக்கு ஜனாதிபதி தள்ளப்படுவார் என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது. (உ)

## வவுனியாவில் சூடு!

யாழ்ப்பாணம், செப். 3

வவுனியா நகரப் பகுதிக்குச் சென்ற மக்கள் மீது நேற்றுக் காலை படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை. (உ-5)

## ரெலோ எம். பி வாபஸ்

ரெலோ அமைப்பைச் சேர்ந்த அம்பாறை மாவட்ட எம். பி திரு. திவ்வியநாதன், தான் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட பிரேரணையில் கையொப்பமிட்டதை வாபஸ் பெற்றுக் கொள்வதாக அறிவித்திருக்கிறார். (உ-10)

## ரங்கன் நல்லூர் வாசியாம்

சென்னை, செப். 3

தற்கொலை செய்து கொண்ட சிவராசனின் கார்ச் சாரதி ரங்கன் நல்லூரைச் சேர்ந்தவர் என்ற தகவலை அவரின் படத்துடன் கொழும்புப் பத்திரிகை ஒன்று வெளியிட்டிருக்கிறது. (இ-எ)

## பிரேமாவுக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பிரேமச்சந்திரா போன்ற சிலரைத் தவிர, பிரேரணையில் ஒப்பமிட்டிருக்கும் ஏனைய ஆளும் கட்சி உறுப்பினர்களின் விவரங்களை இரகசியமாக வைத்திருக்க அதிருப்தியாளர் குழு விரும்புகிறதாம்!

இதனால் நேற்றைய கூட்டத்தில் அதிருப்தியாளர் குழுவைச் சேர்ந்த எம்.பிக்களையும் பங்குபற்றும்படி திரு. லலித் அத்துலத் முதலியும் அவரைச் சார்ந்தவர்களும் கேட்டுக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

இந்தக் கூட்டத்தில் 116 எம்.பிக்கள் கலந்து கொண்டபோதிலும், அவர்களில் யார் தனது பக்கம், யார் எதிர்ப்பக்கம் என்பது ஜனாதிபதிக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

ஜனாதிபதி மீதான குற்ற விசாரணைப் பிரேரணையை நிராகரிக்கும்படி சபாநாயகரைக் கோரும் தீர்மானம் ஒன்று நேற்றைய கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. (உ-எ-த-5)


BITSMANS
INSTITUTES
MANIPAY

புதிய பகுதிகள்

A/L 92

★ பௌதிகம் ★
(புலம்)
திரு. சௌந்தி
B Sc. (Hons.)
Wed. 4 00 p.m.

★ வெப்பவியல் ★
திரு. அருள்தாஸ்
B. Sc. (Hons)
Mon. Wed. 5.15 ...


## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

● சுடரோன் ●
[நடராஜன் ஜெகதீஸ்வரன்]

வீர ஜனனம்: 16 - 07 - 1969

வீர மரணம்: 21 - 07 - 1991

வெற்றிலைக்கேணி, கட்டைக்காட்டில் நடந்த நேரடி மோதலில் வீரமரணமடைந்த சுடரோனுக்கு எமது அஞ்சலிகள்.

ஸ்ரீ துர்க்கா கிறைண்டிங் மில்.

நகுலேஸ்வரா வீதி,
கருகம்பானை. (18009)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 3 - 09 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org